பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 16 திங்கட்கிழமை 01.01.2023 கதிர் 416

# 2024 மலர் பாதையாக இருக்காது கல்லும் முள்ளும் நிறைந்திருக்கும்

## சவாலைப் புரிந்துகொள்வது இலங்கையரின் பொறுப்பு
## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

**2024 மலர் பாதையாக இல்லாமல்,முட்களும்,கற்களும் நிறைந்த பாதையாகவே அமைந்திருக்கும்.இதனால், இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் போது எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்துகொள்ள வேண்டியது இலங்கையராகிய எமது பொறுப்பாகும் என்று ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

**அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,**

**பலசவால்களுக்கும்எதிர்பார்ப்புக்களுக்கும்மத்தியிலேயே** ☞2

## இது ரகசியம் அல்ல!

புத்தாண்டு பிறந்துவிட்டது. இந்த ஆண்டில் எப்படியும் தேர்தல் வரும் என்ற எதிர்பார்ப்புப் பலமாக இருக்கின்றது. அரசுத் தலைவர் தேர்தல் நடத்தப்படும் என்கிற நம்பிக்கையில் அதற்கான நகர்வுகள் மும்முரமாகத் தொடங்கிவிட்டன. ரணிலுக்கு ஆதரவு தெரிவிக்கக்கூடிய கூட்டணி ஒன்றை அமைப்பதற்கான புதிய கூட்டணி அலுவலகம் இன்று திறக்கப்படுகின்றது என்று மன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஸா ஆகியோர அறிவித்திருக்கின்றனர்.

மொட்டுக் கட்சியில் அதிருப்தியுற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் மாகாண மற்றும் உள்ளூராட்சி ☞2

## சு.க. இன்னும் முடிவில்லை

ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சிபோட்டியிடுவது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்று சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளரை நிறுத்துமா என்று நேற்றையதினம் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எதிர்வரும் ஜனாதிபதிதேர்தலில்வேட்பாளரை ☞2

# இலங்கையின் 75 வருட துன்ப வரலாற்றை அடுத்த ஜனாதிபதித் தேர்தல் மாற்றிவிடும்

## ஜேவிபியின் விஜித ஹேரத் எம்.பி. நம்பிக்கை

அடுத்த ஜனாதிபதி தேர்தல் 75 வருட துன்ப வரலாறு கொண்ட அரசியல் கலாசாரத்தினை மாற்றியமைப் பதற்கான ஒரு திருப்புமுனையாக அமையும் என்று தேசிய மக்கள் சக்தியின் பிரசார செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

பொத்துவிலில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்தில் நடைபெறும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அரசமைப்பின் பிரகாரம் அந்தத் தேர்தல் நடத்தப்படும்.

அவ்வாறு தேர்தல் நடத்தப்படுகின்றபோது, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெறுவார். அதேநேரம் 75வருட துன்ப வரலாறு கொண்ட அரசியல் கலாசாரத்தினை மாற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பம்கிடைக்கவுள்ளது.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற பிரிவினைக் குட்படுத்தி ஆட்சி செய்த கலாசாரத்தினை மாற்றியமைக்க வேண்டும். கொழும்பு 07 இல் உள்ளவர்களோ அல்லது கொள்ளுப்பிட்டியில் உள்ளவர்களோ நெருக்கடிகளுக்கு உள்ளாகவில்லை. ☞2

# புதிய தேர்தலுக்கு வழி வகுப்பதே 2024இன் முதன்மை போராட்டம்

## எதிர்க் கட்சித் தலைவர் புத்தாண்டு வாழ்த்து

புதியதேர்தலுக்குவழி வகுப்பதே 2024இன் முதன்மையானபோராட்டமாக இருக்க வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

புத்தாண்டுவாழ்த்துச் செய்தியில் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ள அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வெற்றிகளைவிட எண்ணற்ற தோல்விகளை உள்ளடக்கிய ஒரு வருடம் முடிந்து புதிய வருடம் உதயமாகிறது. 2023ஆம் ஆண்டு, நம் மனதில் மகிழ்ச்சியை கொண்டுவரக் கூடியவாறு எதுவும் ☞2

# மக்கள் மீது வரிச்சுமையை ஏற்படுத்தும் அரசியல்வாதிகளின் தியாகம் என்ன?

## வசந்த பண்டார எம்.பி. கேள்வி

மக்களின் மீது வரிச்சுமையை ஏற்படுத்தும் அரசியல்வாதிகளின் தியாகம் என்னவென்று சுயாதீன அணியின் நாடாளுமன்ற உறுப்பினரான வசந்த பண்டார கேள்வி எழுப்பியுள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வற்வரி 3 சதவீதத்தினால் அதிகரித்து 18 சதவீதமாக உயர்த்தப்படவுள்ளது. இதனால் நெருக்கடியில் உள்ள மக்களுக்கு மேலும் பலத்த நெருக்கடிகள் ஏற்படப்போகின்றன. அந்த வகையில், மக்களின் அன்றாட வாழ்க்கை பெரும் போராட்டமாக மாறப்போகின்றது.

இந்த விடயத்தினை நாம் நாடாளுமன்றத்திற்குள்ளும், அதற்கு வெளியிலும் பல சந்தர்ப்பங்களில் தொடர்ச்சியாக தெரிவித்துவருகின்றோம். ஆனால் எந்தவொரு ஆளும் தரப்பினரும் அதுபற்றிக் கரிசினைகள் கொண்டதாகத் தெரியவில்லை.

அதேநேரம், நாட்டின் பொருளாதார ☞2

# தமிழ் பொது வேட்பாளரால் எந்தவிதப் பயனும் இல்லை

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு

வெற்றிபெறமுடியாத நிலையில் தமிழ் பொதுவேட்பாளரைக் களமிறக்குவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என்று இராஜாங்க அமைச்சர் சதாசிவம்வியாழேந்திரன் கேள்வி எழுப்பினார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின்பின்னர் ஊடகங்களுக்க கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த் தரப்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் பேசப்படுகின்றது. இவ்வாறு தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டால் அதனால் என்ன பயன் ☞8

# தமிழருக்கு தீர்க்கமான முடிவுகளை தரும் ஆண்டாக 2024 அமையட்டும்

## சம்பந்தன் நம்பிக்கையோடு வாழ்த்து

'பிறந்துள்ள 2024ஆம் ஆண்டு தமிழர்களாகிய எமக்குத் தீர்க்கமான முடிவுகளை எடுக்கக்கூடிய ஆண்டாக இருக்கும் என்று நம்புகின்றோம்.' என்று தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

புத்தாண்டையொட்டி அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது:

மலர்ந்துள்ள 2024 ஆம் ஆண்டானது இன, மத, கட்சி வேறுபாடின்றி நாட்டு மக்களுக்குச் சமாதானம், மகிழ்ச்சி, சுபீட்சம் மிக்கதாக அமைய வேண்டும்.

இந்த ஆண்டு தமிழ் மக்களுக்கு நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கொண்டு வருகின்ற ஆண்டாகத் திகழ வேண்டும். ☞8

# கொரோனாவை இனங்காண்பதற்கான பி.சி.ஆர். பகுப்பாய்வுப் பிரிவை உடன் இயக்க நடவடிக்கை தேவை

## சுகாதார வல்லுநர்கள் சங்கம் வலியுறுத்து

பி.சி.ஆர்.இரசாயணப் பகுப்பாய்வுப் பிரிவினை மீள இயக்குவதற்கு உடன்நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சுகாதார வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ்

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா தொற்றின் காரணமாக அண்மைக்காலத்தில் இரண்டு இறப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இதனைவிடவும் ஜே.என்.1 கொரோனாவின் ☞2

# பரந்துபட்ட கூட்டணியை அமைக்க ஐக்கிய மக்கள் சக்தி முழு முயற்சி

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைப்பதற்கான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜே.சி.அலவத்த தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முகங்கொடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே உள்ளது. அந்தத் தேர்தலில் எமது கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவை ☞2

# குடும்ப ஆதிக்கமற்ற ஜனநாயகமே சம்பிக்க கூட்டணியின் அடிப்படை

## இதனை அவரே அறிவித்தார்

குடும்ப ஆதிக்கமற்ற போட்டி ஜனநாயகத்தின் அடிப்படையில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதனை அடிப்படையாகக் கொண்டே எமது கூட்டணி அமையும் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் உட்பட அவரது கட்சியின் எதிர்கால கூட்டிணைவு தொடர்பில் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் கடந்த கால வரலாற்றைப் பார்க்கின்றபோது, தந்தைக்குப் பின்னர் மகனும், தயாருக்குப் பின்னர் மகளும் தான் ஆட்சி அதிகாரத்தில் அமர வேண்டும் என்ற நிலைப்பாடுகள் காணப்பட்டன.

அவ்வாறில்லாது விட்டால் மாமனுக்குப் பின்னர் மருமகனும், அண்ணனுக்குப் ☞2

# எந்தவொரு பொறுப்புக்கூறலையும் தவிர்த்து நடந்ததே ரணிலின் ஆட்சி

## கஜேந்திரன் விளாசல்

நல்லிணக்கத்தை ஏற்படுத்தவதாக கூறிக் கொண்டு, ஆணைக்குழுக்களைமீளஅமைத்து கண்துடைப்பதும், எந்தவொருவிடயத்திலும் பொறுப்புக்கூறலை தவிர்த்து நடப்பதும் தான் ரணலின் கடந்த வருட ஆட்சியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பி ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

உறுப்பினர்களைத்திரட்டிரணிலுக்கு ஆதரவானபரந்துபட்டகூட்டணியை உருவாக்குவதே இந்தப் புதிய கூட்டணியின் நோக்கம். கடந்த ஆண்டு பல மாதங்களாக இந்தக் கூட்டணி பற்றிய பேச்சு அடிபட்டது. இதற்காகநாடாளுமன்றஉறுப்பினர் நிமல் லன்ஸாவுக்கு அரசுத் தலைவர் அதிக சலுகைகளை ஜனாதிபதி அலுவலகத்திலும் வேறு பகுதிகளிலும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

இப்படி ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கானகூட்டணிகளை அமைப்பதில் அனைத்துத் தரப்புகளும் மும்முரமாக இருக்கின்றன. ஐக்கிய மக்கள் சக்திக்கும் மொட்டில் இருந்து பிரிந்த சுதந்திர தேசிய சபைக்கும் இடையிலான கூட்டணி இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது என்று கூறப்படுகின்றது. அதுமட்டுமல்ல அரசுத் தரப்பிலிருந்தும் சிலரைத் தன் பக்கக் கூட்டணிக்குள் இழுத்தெடுக்கும் முயற்சியிலும் சஜித் ஈடுபட்டுள்ளார்.

இதையொட்டி, கடந்த வாரம் சஜித், ஆளும் தரப்பின் பலம் வாய்ந்த மூன்று அமைச்சர்களை கொழும்பில் இரண்டு இடங்களில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இரண்டு அமைச்சரவை அமைச்சர்களை ஒரு இடத்தில் சந்தித்து கலந்துரையாடிய சஜித், மற்றுமொரு இடத்தில் அதிகாரமிக்க அமைச்சரவை அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளார். இந்த இரண்டு பேச்சுக்களும் ஒரு சிறப்பு நபரால் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன. இந்த இரண்டு அமைச்சரவை அமைச்சர்களுக்கு மேலதிகமாக, கடந்தவாரம்சஜித்மேலும்பலஆளும் தரப்பு விசேட பிரமுகர்களுடனும் இவ்வாறு கலந்துரையாடியுள்ளார்.

இந்த கலந்துரையாடலின் முடிவில் சஜித் ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. அது நிச்சயம் கூட்டணியை உருவாக்கி, அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கான பின்னணியை தயார்படுத்துவதற்கானது என்று சொல்கிறார்கள். மேலும், கூட்டணியை உடைக்கவோ அல்லது சீர்குலைக்கவோ கட்சிக்குள்ளிருந்தோ அல்லது கட்சிக்கு வெளியில் இருந்தோ யாராவது செயல்பட்டால், அந்தஸ்து, பதவி பாராமல் அனைவருக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கவும் சஜித் முடிவு செய்திருக்கிறாராம்.

அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் விசேட பிரமுகர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த கூட்டணியைச் சீர்குலைக்க ஐக்கிய மக்கள் சக்திக்குள் குறிப்பிட்ட சிலர் மேற்கொள்ளும் சதித்திட்டங்கள் தொடர்பில் சஜித்திடம் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இதையடுத்தே கூட்டணியைக் குப்ப முயல்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க சஜித் தீர்மானித்துள்ளாராம்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## 2024 மலர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் 2024 புது வருடத்தை ஆரம்பிக்கிறோம். ஆயிரக் கணக்கிலான எண்ணங்களைப் பூர்த்தி செய்துகொள்ள, நம் நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகும்.

கடந்த காலங்களில் நீங்கள் செய்த அர்ப்பணிப்புக்கள் மற்றும் துயரங்களைத்தாங்கிக்கொண்டதன் பலனாக நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கான அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்க எம்மால் முடிந்துள்ளது.

இருப்பினும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக, அதே பாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டியது அவசியமாகும். அது மலர் பாதையாக இல்லாமல், முட்களும், கற்களும் நிறைந்த பாதையாகவே அமைந்திருக்கும்.

இதனால், இலங்கையை மீளக் கட்டியெழுப்பும்போதுஎதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்துகொள்ள வேண்டியது இலங்கையராகிய எமது பொறுப்பாகும்.

ஜனவரி மாதத்திற்கு ஜேனஸ் எனும்கடவுளின்பெயர்சூட்டப்பட்டது. அக்கடவுளினால் முன்னோக்கி மாத்திரம் அன்றி, பின்னோக்கியும் பார்க்க முடியுமாம்.

அதனால் எதிர்காலம் தொடர்பில் மட்டுமன்றி, கடந்த காலம் தொடர்பிலும் அறிந்து, ஒவ்வொருவரினதும் சவால்களைப் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டின் முன்னேற்றத்துக்காக எமது பொறுப்புக்களை அறிந்துகொள்வோம்.

அவற்றை செயற்படுத்தி, தாய் நாட்டைபலப்படுத்துவோம். அதற்காக பொறுப்புடனும் அர்பணிப்புடனும் செயற்படுவோம். அதனால் புத்தாண்டை செழிப்பானதாக மாற்றிக்கொள்வோம். பிறந்திருக்கும் இந்த ஆண்டு, அனைவருக்கும் வெற்றிகரமான ஆண்டாக அமைய வாழ்த்துகள்.

## பரந்துபட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளராக களமிறக்குவதற்கு எமது செயற்குழு அனுமதி அளித்துள்ளது.

அந்த வகையில் அவர் தலைமையில் பரந்து பட்ட கூட்டணியொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமன்றி, ஜனாதிபதி தேர்தல் மட்டுமல்லஎந்தவொருதேர்தலையும் நாம் முகங்கொடுப்பதற்கு தயாராகவே உள்ளோம்.

ஆனால், அரசாங்கம் உரிய காலப்பகுதியில் தேர்தலை நடத்த வேண்டும். மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தி ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும். அதற்காக நாம் தொடர்ந்தும் செயற்படுவோம் என்றார்.

## தமிழ் பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தப்பட்டால் அதனால் என்ன பயன் ஏற்படப்போகின்றது.

அவரால் ஜனாதிபதி தேர்தலில் நிச்சயமாக வெற்றி பெறவே முடியாது. அவ்வாறான நிலையில் தேர்தலில் அவர் போட்டியிடுவதால் தமிழ் மக்களுக்கு என்ன பயன் கிடைக்கப்போகின்றது.

தமிழ் அரசியல்வாதிகள் வழமையாக, வெற்றிபெறுகின்ற ஜனாதிபதி வேட்பாளரை தவிர்த்து தோல்வி அடைகின்ற வேட்பாளரையே ஆதரித்து வந்த வரலாறுதான் அதிகமாக உள்ளது. இதனால்தான் தமிழ் மக்கள் தற்போதுமோசமானநிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அவ்வாறிருக்கையில், தோல்வியடையும் குதிரையில் பந்தயத்தைக் கட்டுவதால் எந்த நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை. வெற்றியடையக் கூடிய ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைக் கவனத்தில் கொண்டு அவருடன் எமது மக்களின் விடயங்கள் சார்ந்து பேச்சுக்களை நடத்தி அதன் பின்னர் அவருக்குஆதரவளிப்பதுதொடர்பாக மக்களின் அங்கீகாரத்துடன் முடிவெடுப்பதுதான்பொருத்தமானது.

அந்த முடிவினை தமிழ் மக்கள் சார்ந்து ஒருமித்த குரலாக எடுப்பதேமிகப்பொருத்தமானதொரு நடவடிக்கையாகஅமையும்என்றார்.

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஷ்டங்களுக்கு முகங்கொடுக் கவில்லை.

தம்புத்தேகமவில் உள்ள வர்களும், அவர்களின் குழந்தைகளும்தான்நெருக்கடிகயில் உள்ளார்கள். அதுபோன்றுதான் நாட்டின் ஏனைய கிராமங்களில் உள்ளவர்களும் மிகுந்த நெருக்கடிக்குள் உள்ளாகின்றனர்.

ஆகவே மக்களின் நெருக்கடிகளை, கஷ்டங்களை அறிந்த, உணர்ந்திருக்கின்ற ஒரு தலைவரை நாட்டின் ஜனாதிபதியாக்குவோம். அவர்தான் எமதுகட்சியின்தலைவர்அநுரகுமார திஸாநாயக்க. அவர்மக்கள்தலைவர்.

இந்த நாட்டிற்கு அவ்விதமான ஒரு தலைமையை ஏற்படுத்தி அதிகாரங்களை அளிக்கின்றபோது, மிகப்பெரும் மாற்றத்தினை நாம் அனைவரும் கூட்டிணைந்து ஏற்படுத்த முடியும் - என்றார்.

## மக்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்சிக்காக மக்கள் மீது வரிச் சுமைகளை ஏற்படுத்தும் ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள் பொருளா தார மீட்சிக்காக எவ்விதமான தியாகங்களை மேற்கொள்கின்றார்கள் என்பதை சிந்திக்க வேண்டும்.

அவர்கள்தமதுஊழியத்தையோ, இதர படிகளையோ விட்டுக் கொடுப்பதற்கு தயாராக இல்லை. குறிப்பாக, ஆளும் தரப்பின் அத்தனை உறுப்பினர்களும் சுகபோகங்களை அனுபவத்து வருகின்றார்கள் - என்றார்.

## குடும்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர்தம்பியும்தான்அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்ற கலாசாரமும் காணப்பட்டது.

இந்த குடும்ப ஆதிக்க அரசியல் கலாசாரம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

அதுமட்டுமன்றி, நாம்ஜனநாயக அடிப்படையில் போட்டிகளின் அடிப்படையில்மக்கள்ஆணைபெற்ற தரப்பினர் அதிகாரத்திற்கு வர வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

அந்த வகையில், நாடாளுமன் றத்திற்கு வெளியில் நாம் பரந்துபட்ட கூட்டணியொன்றில் பங்கேற்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

குறிப்பாக, நாடாளுமன்றத்தில் உள்ள 225பேரும் திருடர்கள் என்ற நிலைப்பாட்டில் நாம் இல்லை. ஆகவே சிறந்த தரப்பினருடன் நாம் ஒன்றிணைந்து நாட்டின் எதிஜகாலத்துக்கான பொருத்தமான தலைமையை வழங்குவோம் என்றார்.

## புதிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்காத ஆண்டு. அந்த ஆண்டில் மக்கள் வெற்றியின் சாயல் கூட காணவில்லை.

முறையாக, மக்கள் ஆணையைப் பெற்ற ஆளும் தரப்பை உருவாக்கினால் அன்றி தற்போதைய குழப்பமான மற்றும் நம்பிக்கையற்ற இருள் சூழ்ந்த காலத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. எனவே, இந்த ஆண்டு புதிய தேர்தலுக்கு வழி வகுப்பதே முதன்மையான போராட்டமாக இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், 2024ஆம் ஆண்டும் ராஜபசக்களை முன்னரையும்விட பாதுகாப்பாக ஆட்சியாளர் தொங்கு பாலத்தின் ஊடாக கரை சேர்த்த ஆண்டாக அமையலாம்.

நாடு பல பெரும் பொருளாதார மற்றும் அரசியல் இடர்களை எதிர்நோக்கி வரும் இத்தருணத்தில், நாட்டுமக்களின்சாதாரணவாழ்க்கை நிலைமைகளில்கூடபலஅசாதாரண சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளன.

விவசாயம் மற்றும் தொழில் முயற்சியாளர் சார்ந்த தன்னிறைவு பொருளாதார முறை தற்போதைய ஆட்சியாளர்களின் தொலைநோக்கற்ற நடவடிக் கைகளால் முற்றிலும் தலைகீழாக மாறியுள்ளது.

இந்நிலைமாறவேண்டுமானால், ஆட்சியாளர்களின் நன்மைகளைப் பற்றி சிந்திக்காமல் மக்களைப் பற்றி சிந்திக்கும் ஆட்சி முறையே நாட்டுக்கு தேவை.

75 ஆண்டுகால ஜனநாயக வரலாற்றில் அதிகாரம் இல்லாமல் எந்த எதிர்க்கட்சியும் செய்யாத பொதுச் சேவையை நாட்டின் ஜனரஞ்சக எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடந்த 3 ஆண்டுகளில் செய்துள்ளது. இந்த சேவையை 2024ஆம்ஆண்டிலும்தொடர்வதே எங்கள் நோக்கம்.

மேலும், மக்களை ஒடுக்கி, வரிக்கு வரி விதித்து, மக்களின் வாழ்வை அழிக்கும் வகையில் அரசு செயற்பட்டுள்ள இந்த தருணத்தில், நாம் மீண்டும் ஒரு நாடாக ஒன்றிணைய வேண்டும்.

எதிர்வரும் புத்தாண்டு இலங்கையர்களான எமக்கு முக்கியமான ஆண்டாகும். நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பல தேர்தல்கள் நடைபெறவுள்ள ஆண்டாகும்.

எனவே, இதுவரையில் நாம் பெற்ற வெற்றிகளின் பலனை அமைதியான முறையில் அனுபவித்து ஜனநாயகத்தை பாதுகாத்துக்கொண்டு எமது தேசிய அபிலாஷைகளை நிறைவேற்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன். இந்தப் புத்தாண்டிலாவது மக்கள் தங்கள் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும் என குறிப்பிட்டுள்ளார்

## சு.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தவது தொடர்பில் இன்னமும் எந்தவிதமான தீர்மானங்களையும் எடுக்கவில்லை. அது தொடர்பில் நிறைவேற்றுக்குழு தீர்மானிக்கும்.

அதேநேரம், சுதந்திரக் கட்சியானதுநாட்டினைபொருளாதார ரீதியாக மீட்டெடுக்கும் தலைவர் யார் என்பதை அவதானித்து அவருக்கு ஆதவளிப்பதா இல்லையா என்பது தொடர்பிலும்கவனத்தில்கொள்ளும்.

மேலும்தற்போதையநிலையில் ஜனாதிபதிவேட்பாளர்களின்பட்டியல் நீண்டு செல்கின்றது. அதனையும் கவனத்தில்கொண்டுள்ளது என்றார்.

## பி.சி.ஆர். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பிறழ்வு இருப்பதாக கூறப்படுகின்றது.

உண்மையில் குறித்த பிறழ்வு இருக்கின்றதா இல்லையாஎன்பதை கண்டறிவதற்கு உரிய பரிசோதனைகளை மேற்கொள்வதற்குரிய நிலைமைகள் காணப்படவில்லை.

குறிப்பாக, பொதுமக்கள் ஒவ்வொருவரின் பின்னால் சென்று பரிசோதனைகளைச் செய்வதில்லை. ஆனால் மருத்துவ சிகிச்சைக்கு வருகை தருபவர்களை அவர்களுக்கு காணப்படும் நோய் நிலைமைகளின் குணாம்சங்களின் அடிப்படையில் அவதானம் செலுத்தி பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும்.

அவ்வாறான நிலைமைகள் இருக்கின்றபோதும், கடந்தநாட்களில் கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான பி.சி.ஆர். பகுப்பாய்வுப் பிரிவு மூடப்பட்ட நிலையிலேயே உள்ளது.

ஆகவே சுகாதார அமைச்சின் செயலாளர் முதலில் இந்த விடயத்தில் கவனத்தினைச்செலுத்தி அப்பிரிவினை மீள இயங்குவதற்கு உடன் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




# புதிய தேசிய கூட்டணியில் பங்கேற்பதே தமிழ் அரசியல் கட்சிகளுக்குச் சாதமகம்

## அமைச்சர் விஜயதாஸ 'அட்வைஸ்'



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டிணைந்து பொது வேட்பாளரை களமிறக்குவதோ, அல்லது தேர்தலை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிப்பதோ நாட்டில் உள்ள ஒட்டு மொத்த தமிழர்களையும் பிளவுபடுத்தும் செயலாகவே அமையும் என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதா ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன், கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் தமிழ் அரசியல் கட்சிகள் புதிய தேசிய அரசியல் கூட்டணியையும், இன,மத,மொழி வாதற்ற வேட்பாளரையும் அடையாளம் கண்டு அதில் பங்கேற்பதே சிறந்த அரசியல் சாணக்கியமான நடவடிக்கையாக அமையும். அவ்வாறு இல்லாது விட்டால் ஒட்டுமொத்த தமிழர்களையும் பிளவுபடுத்தும் செயற்பாடாகவே அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்ற அதேநேரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. இந்த நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அமைச்சர் விஜயதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு, கிழக்கு தமது பூர்வீகமான பிரதேசம் என்ற நிலைப்பாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் தமது பிரதேசத்தை மையப்படுத்தியதாக ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கோ அல்லது தேர்தலை மக்களின் ஆதரவுடன் புறக்கணிப்பதற்கோ முழுமையான உத்தியைக் கொண்டிருக்கின்றன.

ஆனால், யதார்த்த நிலைமைகளைப் பற்றி அக்கட்சிகள் சிந்திப்பது தான் மிகவும் அவசியமானதாகின்றது. வடக்கு,கிழக்கை மையப்படுத்திய பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டால் அந்த வேட்பாளருக்கு வெறுமனே அப்பகுதிகளில் தான் ஆதரவு கிடைக்கும். வடக்கு,கிழக்குக்கு வெளியில் உள்ள தமிழ் மக்கள் ஆதரவளிக்காத நிலைமையொன்று ஏற்படுவதற்கே அதிகமான சாத்தியப்பாடுகள் உள்ளன.

இதனால் தேர்தல் முடிவில் நாட்டில் உள்ள ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பிளவுபடுத்துவதாகவே அந்த முயற்சி மாறிவிடும் சூழலே அதிகமாக உள்ளது.

மறுபக்கத்தில், தமிழ் கட்சிகளின் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறப்போவதில்லை. அவ்வாறு பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டதன் பின்னர் தேசிய கட்சி களின் சார்பில் களமிறங்கும் வேட்பாளர் ஒருவர் வெற்றி பெற்றால் அதன் பின்னர் அசௌகரியத்துக்குள் உள்ளாகப்போவதும் தமிழ் மக்கள் தான். ஆகவே அதுபற்றியும் தமிழ்க் கட்சிகள் கரிசனைகளைக் கொள் வதே பொருத்தமானது. என்னைப்பொறுத்தவரையில், தமிழ் அரசியல் கட்சிகளுக்கு கடந்த காலத்தில் எடுத்த தீர்மானங்களின் அடிப்படையில் பல்வேறு அதிருப்தியான நிலைமைகள் காணப்படுவதை ஏற்றுக்கொள்கின்றேன். அந்த வகையில், தமிழ் அரசியல் கட்சிகள் தமது கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் இன,மத,மொழி, வாதங்களற்ற, வாக்குறுதிகளை மறுதலிக்கின்ற வேட்பாளர் அற்றதொரு தரப்பினை அடையாளம் காண வேண்டும். அவ்வாறு தமிழ் அரசியல் கட்சிகள் அடையாளம் காணும் அரசியல் தரப்பானது புதிய தேசிய அரசியல் கூட்டணியாக இருப்பதோடு அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமது விடயங்களையும் உள்ளீர்ப்பதற்கான பேச்சுக்களை முன்னெடுத்து தேசிய ரீதியில் பங்குபற்ற வேண்டும்.

அவ்விதமான தீர்மானமொன்றை தமிழ் அரசியல் கட்சிகள் முன்னெடுப்பதே அரசியல் சாணக்கியமாக அமைவதோடு தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கும் சிறந்ததாகக் காணப்படும்.

1948இல் இலங்கை சுதந்திரமடைந்தபோது, சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடுகள் காணப்பட்டதைப்போன்றதொரு சூழலை உருவாக்கு-வதற்கு தேசிய ரீதியில் தமிழ் அரசியல் கட்சிகளின் பங்களிப்பானது மிகவும் இன்றியமையாதவொரு விடயமாகும். - என்றார். (05)

# சம்பந்தன் இல்லத்தில் ஜனவரி 10 ஆம் திகதி தமிழ் அரசின் விசேட அரசியல்குழுக் கூட்டம்

இலங்கைத்தமிழரசுக்கட்சியின் விசேட அரசியல் குழுக் கூட்டம் எதிர்வரும் பத்தாம் திகதி அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இதனையடுத்து மத்திய செயற்குழுக் கூட்டமொன்றும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரா.சம்பந்தன், பிரதிநிதித்துவம் செய்யும் திருகோணமலை மாவட்டத்தின் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கிளைகளுக்கான அங்கத்தவர்கள் தெரிவுகள் இடம்பெற்றபோது அவரது ஆதரவாளர்களும், கட்சியுடன் நீண்டகாலமாக செயற்பட்டவர்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து அத்தெரிவுகளில் பூரண திருப்தியற்ற நிலைமைகள் காணப்படுகின்றன எனச் சுட்டிக்காட்டி கட்சியின் தலைவருக்குக் கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

அது குறித்து டிசெம்பர் 17 திருகோணமலையில் ஒழுக்காற்றுக் குழு கூடி விசாரணை நடத்தியது. ஆனால் அதில் குழுவின் தலைவரான யோகேஸ்வரன் பங்கேற்கவில்லை. அவர் கட்சித்தலைமைக்குரிய வேட்பாளர் என்பதால் அவரது பங்கேற்பு ஏற்புடையதல்ல என்று தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் அவர் அந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இந்தப் பின்னணியியே பொதுக் குழக் கூட்டம் நடைபெறுவதற்கு 11 நாட்கள் முன்னதாக கட்சியின் அரசயிற்குழு கொழும்பில் கூடவுள்ளது. 05)

# புதுவெளிச்சம் காட்ட புதுவருடம் வரட்டும்




நாடெலாம் சிறக்க வேண்டும்
வல்லமை பெருக வேண்டும்
வாழ்வது உயர வேண்டும்

தொல்லைகள் தொலைய வேண்டும்
தோல்விகள் அகல வேண்டும்
இல்லது என்னும் வார்த்தை
இன்மையாய் ஆதல் வேண்டும்

போரெனும் வார்த்தை மண்ணில்
பொசுங்கியே போதல் வேண்டும்
மாசுடை ஆட்சி மண்ணில்
மடிந்துமே ஆக வேண்டும்

ஊழலும் ஒழிய வேண்டும்
உண்மையே நிலைக்க வேண்டும்
வாய்மையின் வழியில் மக்கள்
மண்ணிலே நடக்க வேண்டும்

உழைபவர் உயர வேண்டும்
நல்லூதியம் கிடைக்க வேண்டும்
கொடுப்பவர் பெருக வேண்டும்
குவலயம் சிறக்க வேண்டும்

கல்வியில் உயர்வு வேண்டும்
கசடுகள் அகல வேண்டும்
கண்ணியம் என்றும் வாழ்வில்
கட்டாயம் அமர வேண்டும்

அறவழி என்னும் எண்ணம்
அகத்தினில் அமர வேண்டும்
அன்புதான் உயர்வு என்று
அனைவரும் உணர வேண்டும்

இரப்பது அகல வேண்டும்
கொடுப்பது உயர வேண்டும்
பொறுப்பது சிறப்பு என்று
விருப்புடன் ஏற்க வேண்டும்

வேற்றுமை அகல வேண்டும்
வெறுப்புகள் ஒழிய வேண்டும்
சமத்துவம் நிலைக்க வேண்டும்
சன்மார்க்கம் தளைக்க வேண்டும்

பண்பது உயரவேண்டும்
பக்குவம் நிறைதல் வேண்டும்
அன்பினைப் பகிர்ந்து மாந்தர்
அனைவரும் இணைதல் வேண்டும்

புது வருடம் அத்தனையும்
சுமந்து கொண்டே வரட்டும்
வரும் அனைத்தும் எங்களுக்கு
வளங் கொடுக்க வரட்டும்

புது வெளிச்சம் காட்டப்
புது வருடம் வரட்டும்
வரு வருடம் நமக்கு
வரங் கொண்டு வரட்டும்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

# தமிழ அரசுக் கட்சி மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும்

## சாணக்கியன் நம்பிக்கை



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும். தற்போது வரை அதில் எந்த மாற்றமும் இல்லை. எங்களுடைய மனங்களில் மாநாட்டை ஒத்திவைக்கின்ற எண்ணம் இல்லை என்று அக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாடு தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் தெரிவிக்கையில் -

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாடுநான் அறிந்தவரையில் திட்டமிட்டபடி ஜனவரி மாதம் 28 ஆம் திகதி நடைபெறும்.

எனினும், அதில் மாற்றங்கள் அல்லது ஏதும் வித்தியாசமான விடயங்கள் நடைபெற இருக்கின்றனவா? இல்லையா? என்பது தொடர்பில் எனக்குஎதுவும் தெரியாது.

ஆனால், ஒரு கட்சியினுடைய மாநாடு அறிவிக்கப்பட்டு பொதுச் சபை உறுப்பினர் எல்லாம் அழைக்கப்பட்டு மாநாட்டுக்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்த பின்னர் மாநாட்டை ஒத்திவைக்க வேண்டிய காரணம் நான் அறிந்த வரையில் இல்லை.

ஏனென்றால் பொறுப்புள்ள கட்சியென்றால் ஒரு மாநாட்டை நடத்தத் தீர்மானித்து அதற்கு ஒரு திகதியை அறிவித்தால் அந்தத் திகதியில் மாநாடு நடக்க வேண்டும். ஆகையினால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் மாநாடு நடக்க வேண்டும்.

எனினும், மாநாடு நடக்குமா என இந்தக் கேள்வி ஏன் இன்று எழுப்பப்படுகின்றது என எனக்குத் தெரியவில்லை. ஆனால், நான் அறிந்த வரையில் திட்டமிட்டபடி மாநாடு நடைபெறுவதில் தற்போது வரை எந்த மாற்றமும் இல்லை.' - என்றார்.

இதேவேளை, 'இந்த மாநாட்டை ஒத்திவைக்கும் எண்ணம் ஏதும் கட்சிக்குள் இருக்கின்றதா?' எனக் கேட்டபோது, 'அவ்வாறு ஒத்திவைக்கும் எண்ணம் எவருக்கும் இல்லை' - என்று அவர் பதிலளித்தார். 'எங்களுடைய மனங்களில் மாநாட்டை ஒத்திவைக்கின்ற எண்ணம் இல்லை. கட்சியில் ஏனைய எவரிடமேனும் அப்படி ஒத்திவைக்கின்ற எண்ணம் ஏதும் இருக்கின்றதா என நீங்கள்தான் அறிய வேண்டும்.' - என்றும் சாணக்கியன் எம்.பி. மேலும் கூறினார். (05)

# தமிழ் அரசுக் கட்சியின் மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும்

## மாவை உத்தரவாதம்



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வருடாந்தமாநாடுதிட்டமிட்டபடிநடைபெறும் என்று அக்கட்சியின் தலைவர் மாவை சோ.சேனதிராசா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வருடாந்தமாநாடுஜனவரியில்நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வாறு திட்டமிட்ட வகையில் மாநாட்டை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

எனினும், கட்சியின் சிரேஷ்ட தலைவரான இரா.சம்பந்தன் திருகோணமலை மாவட்டத்தின் கிளைத்தெரிவுகள் சம்பந்தமாக சில விடயங்களை எனது கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

ஆகவே, அந்தவிடயங்கள் சம்பந்தமாக அவருக்கு பதிலளிக்க வேண்டியுள்ளது. அதனடிப்படையில் நாம் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தை அவருடைய கொழும்பு இல்லத்தில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

அத்தோடு, கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் சம்பந்தமாகவும் சம்பந்தனின் கருத்துக்களையும், அவருடைய பரிந்துரைகளையும் பெற்றுக்கொள்வதற்கும் எதிர்பார்த்துள்ளோம்.

இதனையடுத்து. கட்சியின் மத்திய குழுக் கூட்டமொன்றையும் கூட்ட வேண்டியுள்ளது. அதன்போது கட்சி மாநாடு பற்றிய அனைத்து விடயங்களும் இறுதி செய்யப்படும். -என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சவாலே சமாளி!

உலகம் முழுவதும் இன்று புத்தாண்டை வரவேற்றுக் கொண்டாடுகின்றது. தமிழர்களுக்கு தைத் திங்கள் நடுப்பகுதிதான் புத்தாண்டென்றாலும், உலகோடு ஒத்தோடும் வகையில் ஆங்கிலப் புத்தாண்டையும் வரவேற்று மகிழ்வது அவர் தம் வழமை. தை பிறந்தால் வழி பிறக்கும் என்கிற நம்பிக்கையில் தை எப்போது பிறந்தாலும் அதனை வரவேற்ற அவர்கள் தயாராகவே இருக்கின்றார்கள்.

உலகம் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால் என்னாகுமோ என்கிற கவலையை ஏற்படுத்திவிட்டுச் சென்ற ஆண்டாக 2023 கடந்து சென்றிருக்கின்றது. அந்தக் கவலை இலங்கைக்கு இல்லை. ஏனெனில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை எப்படி இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சிந்தித்துச் செயற்படுமாறு வேண்டிக்கொள்ளும் அரசியல் தலைமையே இலங்கைக்கு வாய்திருக்கின்றது என்பதே அதற்குக் காரணம்.

2023 இலங்கைக்கு வரவேற்கத்தக்க ஆண்டாக அமையவில்லை. கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டைவிட மிக மோசமான ஆண்டாகவே கடந்து சென்றிருக்கின்றது. பொருளாதார நெருக்கடி, பொருள்களின் விலையேற்றம், வருமான இழப்பு, வேலை வாய்ப்பின்மை, வறுமை என்று மக்களைப் பாடாய்ப்படுத்திவிட்ட ஆண்டாகவே அது அமைந்திருந்தது.

தமிழர்களுக்கு இன்னும் மோசமான ஆண்டாக அமைந்திருந்தது. இனப் பிரச்சினைக்கு சிங்கள பௌத்த பெரும்பான்மையுடன் பேசித் தீர்வு காண–முடியும், அதிகாரப் பகிர்வைக் கொழும்பிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கைக்குச் சாவு மணி அடித்த ஆண்டாக 2023ஐ அடையாளம் காண முடியும். அதற்கு முந்தைய ஆண்டுகள் வரையும் இனப் பிரச்சினைக்கான தீர்வை ஏதோவொரு கட்டத்தில் அடைந்துவிடமுடியும் என்கிற நம்பிக்கை துளிர்விட்டபடி இருந்தது. ஆனால் கடந்த ஆண்டு அந்த நம்பிக்கைகள் அனைத்தையும் அழித்து விட்டது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைக்கூட முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு முடியாத ஒரு அரசுத் தலைவரையும் அதற்குக்கூட அனுமதிக்காத ஓர் அரசியல் பின்புலத்தையுமே 2023 வெளிப்படுத்தி நின்றது. ஜனநாயகவாதியாக பிம்பப்படுத்தப்பட்டிருந்த அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வேடம் கலைந்த ஆண்டாகவும் அது அமைந்தது. அவரும் வாக்குகளுக்காக பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு அடிபணிந்து செல்லும் தனது குணத்தை வெளிப்படுத்தி தமிழர்களின் நம்பிக்கைளைச் சிதைத்தார்.

மற்றொருபுறத்தில் உலக நாடுகள் மீது தமிழர்கள் வைத்திருந்த நம்பிக்கைகளும் தகர்ந்துபோன ஆண்டாக 2023 கடந்து சென்றிருக்கின்றது. தமிழர்களுக்கான தீர்வை நாடி சர்வதேசத்திடம் செல்வோம் என்று தமிழ் அரசியல் தலைவர்கள் கூச்சலிட்டுவந்தாலும், அந்த உலக நாடுகள் எவையும் தங்கள் நலன்களைத் தாண்டித் தமிழர்களின் தீர்வுக்காக எதையும் செய்யப்போவதில்லை என்கிற தெளிவையும் கவலையையும் ஒருங்கே தந்த ஆண்டாகவும் 2023 இருந்திருக்கிறது.

இந்த நிலையில் 2024 பிறந்திருக்கின்றது. அது பிறக்கும்போதே சவால்களையும் அச்சுறுத்தல்களையும் இழுத்துக்கொண்டே வருகின்றது. இந்தப் புதிய ஆண்டில் இலங்கையின்பொருளாதாரம்நிலைத்தன்மையைஅடையும் என்று ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் அதற்காக மக்கள் கடும் சுமைகளையும் துன்பங்களையும் சுமக்கவேண்டியிருக்கும் என்று தொடக்கத்திலேயே மிரட்டியபடியே பிறக்கின்றது இந்த ஆண்டு.

இலங்கை மக்களுக்கு பொருளாதார மீட்சி அவசரத் தேவையாக உள்ளது. ஆனால் அதற்கான சத்தியங்கள் தென்படும் ஆண்டாக 2024 நம்பிக்கையைத் தரவில்லை என்றாலும் இதுவொரு தேர்தல் ஆண்டாக இருப்பதன் காரணமாக ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டு நன்மைகள் நடக்கும் நாடு இயல்புக்குத் திரும்பும் என்று நம்பி புத்தாண்டை வரவேற்போமாக.

இந்த ஆண்டில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ள அனைவரும் சேர்ந்து உழைப்போகமாக!



# தென்சீன கடல் உரிமை
# சீனாவின் ஆதிக்கமும் அத்துமீறலும்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

தென்சீனக் கடலில் முழுமையான ஆதிக்கம் செலுத்தும் சீன நாட்டின் புதிய சட்டத்துக்குதான் உடன்படப்போவதில்லை என பிலிப்பைன்ஸ் அரசு செப்டம்பர் 2021இல் அறிவித்தது. இக்கடல் பரப்பில் தாமும் உரிமை கொண்டவர்களாக இருப்பதாகவே பிலிப்பைன்ஸ் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.






தற்போது தென் சீனக் கடலின் பெரும் பகுதியை சீனா உரிமை கொண்டாடுகிறது. அதேநேரம், பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, புரூனே, தாய்வான் ஆகிய நாடுகளும் அந்தப் பகுதிகளைத் தங்களுக்குச் சொந்தமானதாக உரிமை கோரி வருகின்றன. ஆனால், இந்த நாடுகள் உரிமை கோரினாலும் தென்சீன கடல் பகுதிகளிலும் சீன கடற்படை தொடா அத்துமீறலில் ஈடுபட்டு வருகிறது.

### இந்தியா - பிலிப்பைன்ஸ் கடற்போா பயிற்சி

அண்மையில், இந்தக் கடல் பகுதியில் பயணித்த தமது நாட்டின் கடற்படை கப்பல்களை, சீன போா கப்பல்கள் விரட்டியதாக பிலிப்பைன்ஸ் புகாா தெரிவித்தது. இதற்கிடையே, இம்மாதத் தொடக்கத்தில் தென்சீன கடல் பகுதியில் இந்திய கடற்படையும்பிலிப்பைன்ஸ் கடற்படையும் கூட்டுப்போா பயிற்சியில் ஈடுபட்டன. இது சீனாவை அதிருப்தி அடையச் செய்துள்ளது.

இந்தக் கூட்டுப் போா பயிற்சி குறித்து சீன தலைநகர் பெய்ஜிங்கில் செய்தியாளாகள் எழுப்பிய கேள்விக்குப்பதிலளித்தசீன பாதுகாப்புஅமைச்சகசெய்தித்தொடாபாளா வூ கியான், ''இந்தியா -பிலிப்பைன்ஸ் கூட்டு போா பயிற்சி குறித்த அறிக்கையை சீனா கவனத்தில் கொண்டுள்ளது. பல்வேறு நாடுகளிடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு மூன்றாம் தரப்பு நாடுகளின் நலனையோ பிராந்திய அமைதியையோ பாதிக்கும் வகையில் இருக்கக்கூடாது'' என்றார்.

பிலிப்பின்ஸ் கப்பல்கள் மீது சீன போா கப்பல்கள் தண்ணீா அடித்த விவகாரம் குறித்த கேள்விக்கு பதிலளித்த வூ, அது முழுவதும் தவறான தகவல்கள் என்றார்.

### கடும்எதிர்ப்புகாட்டும்சீனா

இந்த சூழலில்தான் பல்வேறு நாடுகளிடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு மூன்றாம் தரப்பு நாடுகளின் நலனையோ பிராந்திய அமைதியையோ பாதிக்கும் வகையில் இருக்கக்கூடாது எனத் தெரிவித்துள்ளது. இதேவேளை இந்திய-சீனஎல்லைப்பகுதிகளில் ஏற்கெனவே பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில், இந்தக் கூட்டுப் போர்ப் பயிற்சியால் இரு நாட்டு உறவில் மேலும் சிக்கல் உருவாகியுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டு இராணுவத்துக்குச் சொந்தமான கப்பலை கடந்த ஓகஸ்ட் 2023 சீனாவின்கடலோரக்காவல்கப்பல் தடுத்ததாகவும் அந்தப் படகின் மீது நீரைப் பாய்ச்சியதாகவும் பிலிப்பைன்ஸ் அரசு குற்றம் சாட்டியது. தென்சீனக் கடலில் தொடர்ந்து தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்த சீனா முயற்சி செய்து வருகிறது.

பிலிப்பைன்சுக்கும் சீனாவுக்கும் இடையில் தென் சீனக் கடல் விவகாரத்தில்அடிக்கடிமோதல்கள் நிகழ்ந்து வருகின்றன.

தென் சீனக் கடலில் உள்ள பல சிறிய தீவுகளை மலேசியா, பிலிப்பைன்ஸ், சீனா போன்ற நாடுகள் உரிமை கொண்டாடி வருகின்றன. இதனால் அடிக்கடி மோதல்கள் நிகழும் மையமாக தென்சீனக்கடல்உருவாகியுள்ளது.

### தென்சீன கடல் உரிமை பாதுகாக்க பிலிப்பைன்ஸ் உறுதி

கடல்சார் போக்குவரத்து பாதுகாப்பு சட்டத்தில் சீனா 2021திருத்தம் செய்தது. இதன் பிரகாரம் இக்கடல்பிராந்தியத்தில்நுழையும்

(7ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# 11 நாள்களில் 85 கோடி ரூபாய் போதைப்பொருள் பறிமுதல்

## 55 கோடி ரூபா சொத்துகள் முடக்கம்

யுக்திய விசேட நடவடிக்கையின்போது 11 நாள்களில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் சந்தைப் பெறுமதி சுமார் 85 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 55 கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்கள் முடக்கப்பட்டன எனவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, குறித்த காலப்பகுதியில் போதைப்பொருள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக பொதுமக்கள் பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் திணைக்களங்களுக்கு 10,798 தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (05)

# தங்க பிஸ்கெட்டுக்களுடன் கட்டுநாயக்கவில் ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவன ஊழியர் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வெளியேறும் முனையத்தில் இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகளால் ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்க பிஸ்கட்டுகளுடன் சந்தேக நபர் விமான நிலைய புறப்படும் முனையத்தின் பணியாளர்கள் வெளியேறும் வாயில் வழியாக வெளியேறும்போது கைது செய்யப்பட்டார் என சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபரின் உள்ளாடைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 66 தங்க பிஸ்கட்டுகள் சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட தங்கம் 7 கிலோ 700 கிராம் எடையுடையது எனவும், இதன் பெறுமதி பல கோடி ரூபாவுக்கும் அதிகம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்தில் 15 வருடங்களுக்கு மேலாக பணியாற்றிய ஊழியர் என சுங்க பிரிவினர் தெரிவித்துள்ளனர். (05)

# மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் உட்பட ஐவர் வாள்வெட்டு தாக்குதலில் காயம்

*இரு குழுக்களுக்கிடையிலான வாள்வெட்டுத் தாக்குதலில் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜி.என்.பி.பெரேரா உட்பட ஐவர் காயமடைந்துள்ளனர்.*

*காயமடைந்தவர்களில் நால்வர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.*

*மொல்லிகொடவில் உள்ள பெரேராவின் வீட்டில் சனிக்கிழமை நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*தாக்கியவர்களைக்கண்டால் அடையாளம் காண முடியும் என்றும் முறைப்பாட்டை பதிவு செய்த பெண் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.* *(05)*

# கசிப்புடன் இளைஞன் சுன்னாகத்தில் கைது

சுன்னாகம் பஸ் நிலையத்தில் கசிப்புடன் இளைஞர் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 7 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கைதானவர் ஆனைக்கோட்டை பகுதியைச்சேர்ந்த 24 வயது இளைஞர் ஆவார்.

சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பிலியந்தலை பட்டாசு தொழிற்சாலையில் வெடிப்பு: உரிமையாளரும் இரண்டு பிள்ளைகளும் காயம்

## பொருள்கள் நாசம்



பிலியந்தலை மாவித்தபுரவில் வீடு ஒன்றில் இயங்கிய சட்டவிரோத பட்டாசு உற்பத்தி நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் நிலைய உரிமையாளர் மற்றும் அவரது இரு பிள்ளைகள் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் வீட்டிலிருந்த மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட தளபாடங்கள் மற்றும் பட்டாசு தயாரிக்க பயன்படுத்தப்படும் பொருள்கள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த வீட்டில் பட்டாசுகள் மற்றும் பட்டாசுகளுக்குத்தேவையானஏனைய பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.

இவ்வருடத்தின் இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமைகாலை 7 மணியளவில் பட்டாசுகளை சந்தைக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை இவர்கள் முன்னெடுத்தபோதே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப்பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்


(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பாதாள உலகக் குழுவினருக்கும் குற்றவாளிகளுக்கும் 2,000 அரச அதிகாரிகள் அடைக்கலம் தருகின்றனராம்

புலனாய்வுத் திணைக்களத்தால் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட அறிக்கையின்படி, பாதாள உலகக் குழுவினர் மற்றும் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் அரசியல்வாதிகள், பொலிஸ் அதிகாரிகள், சிறைச்சாலை அதிகாரிகள் என சுமார் இரண்டாயிரம் அரச அதிகாரிகள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலைமை மாற்றப்படும் வரை பாதாள உலகத்தை ஒடுக்குவது கடினமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகப் புள்ளிகளை விடுவிப்பதற்காக பல்வேறு நிலைகளில் உள்ள அரசியல்வாதிகள் பொலிஸார் ஊடாக தலையிட்டுள்ளமையும் தெரியவந்துள்ளதாகவும் உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

சில அரசியல்வாதிகளுடன் பாதாள உலகக் குழுவினர் தொடர்பில் இருப்பதாகவும் அந்த அரசியல்வாதிகளிடமிருந்து இவர்களுக்கு உயர் பாதுகாப்பு கிடைப்பதை அறிய முடிவதாகவும் புலனாய்வுத்துறை வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

(05)

# பாதை மாறுவோமானால் சர்வதேசம் கைவிடுமாம்

## மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டம் தொடர்பில் எந்தவொரு அரசாங்கமும் மீள்பேச்சை நடத்தலாம். ஆனால் அதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவைப்பெற்றுக்கொள்வதற்குதற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள பாதையைப் பின்பற்றவேண்டியது அவசியமாகும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதிநந்தலால்வீரசிங்கதெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான நிதியியல் உறுதிப்பாட்டு நிலைவரம் குறித்துத் தெளிவுபடுத்தும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுபற்றி மேலும் கருத்து வெளியிட்ட அவர் -

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டத்தின் கீழான பேச்சுகளை அடிப்படையாகக்கொண்டு தற்போது தெரிவுசெய்யப்பட்டிருக்கும் பாதை முறிவடைந்தால், அதன்பின்னர் சர்வதேசசமூகத்திடமிருந்து எந்தவொரு உதவியும் கிட்டாது எனவும் எச்சரித்துள்ளார்.

'சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிதிவசதிச்செயற்திட்டம் கடந்த ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி ஆரம்பமானது.

அந்தச் செயற்திட்டத்தின் பிரகாரம் முதலாம் கட்ட நிதி விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இரண்டாம் கட்ட நிதியை விடுவிப்பதற்குநாம்பூர்த்திசெய்யவேண்டிய நிபந்தனைகள் என்னவென்பது பற்றி மீண்டும் பேச்சுகள் இடம்பெற்றன.

எனவே அடுத்த 4 வருடங்களுக்கு எந்தவொரு அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும், உரிய காலப்பகுதியில் கொள்கைகளில் அவசியமான மாற்றங்களைமேற்கொள்வதைமுன்னிறுத்தி மீள்பேச்சுகளில் ஈடுபடவேண்டிய அவசியத்தைக் கொண்டிருக்கும் தொடர் செயன்முறையே இதுவாகும்.

அதற்கு எவ்வித மட்டுப்பாடுகளும் இல்லை. இருப்பினும் இச்செயற்திட்டத்தின் ஊடாகசர்வதேசசமூகத்தின்ஒத்துழைப்பைத் தொடர்ந்துபெற்றுக்கொள்ளக்கூடியவகையில் நாம் முன்நோக்கிப் பயணிக்கவேண்டும். - எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதுமாத்திரமன்றி, நாணய நிதியத்தின் இச்செயற்திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பதைப் புரிந்து கொண்டிருப்பதாலேயே சர்வதேச நாடுகளின் அரசாங்கங்களும், ஏனைய வர்த்தகத் தரப்புக்களும் இலங்கைக்குக் கடன்சலுகைகளை வழங்கியிருப்பதாகவும் ஆளுநர் நந்தலால் வீரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கடன்மறுசீரமைப்புமேற்கொள்ளப்படும் 10 வருடகாலப்பகுதியில் நாம் தொடர்ந்து இந்தப் பாதையில் பயணிக்கவேண்டும்.

மாறாக அதில் மாற்றங்கள் ஏற்படின், அவர்களும் கடன்சலுகை தொடர்பான அவர்களது தீர்மானத்தில் மாற்றங்களை மேற்கொள்வர்.

எனவே இப்பாதை முறிவடைந்தால், இதற்கு இனியும் ஆதரவு வழங்க மாட்டோம் என அவர்களால் கூற முடியும். அதன்பின்னர் நாம் வருடாந்தம் 6 பில்லியன் டொலர் கடன்களைத் திருப்பிச்செலுத்தவேண்டியிருக்கும். - எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# பணவீக்கம் 4 வீதமாக டிசெம்பரில் உயர்வு

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த நவம்பர் மாதம் 3.4 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், டிசெம்பர் மாதம் 4 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

அதன்படி கடந்த நவம்பர் மாதத்தில் 3.6 சதவீதமாகப் பதிவான உணவுப்பணவீக்கம் டிசெம்பரில் 0.3 சதவீதமாகவும், நவம்பரில் 6.8 சதவீதமாகப் பதிவான உணவல்லாப்பணவீக்கம் டிசெம்பரில் 5.8 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மேலும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணின் மாதாந்த மாற்றம் டிசெம்பர் மாதத்தில் 0.89 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. இதற்கு உணவுப்பொருள்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட 1.16 சதவீத அதிகரிப்பும், உணவல்லாப்பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள், கட்டணங்களில் அவதானிக்கப்பட்ட 0.27 சதவீத வீழ்ச்சியும் காரணமாக அமைந்துள்ளன.

அதேவேளை பொருளாதாரத்தின் அடிப்படைப்பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப்பணவீக்கம் கடந்த நவம்பர் மாதத்தில் பதிவான 0.8 சதவீதத்திலிருந்து டிசெம்பரில் 0.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இது இவ்வாறிருக்க பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மற்றும் நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பவற்றின் மூலம் துணையளிக்கப்பட்டு, பணவீக்கமானது நடுத்தரகாலத்தில் 5 சதவீதம் எனும் இலக்கிடப்பட்ட மட்டத்தை அண்மித்து ஸ்திரமடையும் என மத்திய வங்கி எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

## தமிழ் பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படப் போகின்றது.

அவரால் ஜனாதிபதி தேர்தலில் நிச்சயமாக வெற்றி பெறவே முடியாது. அவ்வாறான நிலையில் தேர்தலில் அவர் போட்டியிடுவதால் தமிழ் மக்களுக்கு என்ன பயன் கிடைக்கப்போகின்றது.

தமிழ் அரசியல்வாதிகள் வழமையாக, வெற்றிபெறுகின்ற ஜனாதிபதி வேட்பாளரை தவிர்த்து தோல்வி அடைகின்ற வேட்பாளரையே ஆதரித்து வந்த வரலாறுதான் அதிகமாக உள்ளது. இதனால்தான் தமிழ் மக்கள் தற்போதுமோசமானநிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அவ்வாறிருக்கையில், தோல்வியடையும் குதிரையில் பந்தயத்தைக் கட்டுவதால் எந்த நன்மைகளும் கிடைக்கப் போவதில்லை. வெற்றியடை யக் கூடிய ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைக் கவனத்தில் கொண்டு அவருடன் எமது மக்களின் விடயங்கள் சார்ந்து பேச்சுக்களை நடத்தி அதன் பின்னர் அவருக்கு ஆதரவளிப்பது தொடர்பாக மக்களின் அங்கீகாரத்துடன்முடிவெடுப்பதுதான் பொருத்தமானது.

அந்த முடிவினை தமிழ் மக்கள் சார்ந்து ஒருமித்த குரலாக எடுப்பதே மிகப்பொருத்தமானதொரு நடவடிக்கையாகஅமையும்என்றார்.

## எந்தவொரு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டில் அரசின் சாதனைகள் என்ற தலைப்பில் நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் தமது கட்சியின் அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மொட்டுக் கட்சியினருடன் கைகோர்த்து பதவிக்கு வந்ததன் பின்னர் அவர் செய்த முதலாவது விடயம், உள்ளூராட்சி மன்றங்களுக்கானதேர்தலைநிறுத்தி ஒட்டுமொத்த மக்களினதும்ஜனநாய உரிமைகளை மீறியமையாகும்.

இதன் பின்னர். அவர் மக்கள் எழுச்சி மூலம் ஆட்சி அதிகாரத்தை விட்டு வெளியேறி பொதுவெளியில் பிரசன்னமாக முடியாது இருந்த ராஜபசக்களையும், அவர்களது குடும்பத்தினரையும்பொதுவெளியில் அச்சமின்றி பிரசன்னமாகுவதற்கு வழிவகுத்துக் கொடுத்தார்.

ஆத்தோடு நிறுத்திவிடவில்லை, ராஜபசக்கள் தலைமையிலான மொட்டுக் கட்சியினர் பகிரங்கமாகக் கட்சியின்மாநாட்டைநடத்தவதற்கும் வழிவகைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே செய்து கொடுத்துள்ளார்.

அதேநேரம், நாட்டை பொருளாதார ரீதியில் மீட்பதாக கூறியுள்ள அவர், தற்போது வற்வரியைஅதிகரித்துமக்களைவரிச் சுமையாளிகளாக மாற்றியுள்ளார். அதேநேரம், ஊழல், மோசடிகள் மூ-லம் சேகரிக்கப்பட்ட நிதியை மீளப்பெற்றுக்கொள்வதற்கு எந்தவிதமானநடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

உயர்நீதிமன்றம், பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவதற்கு யார்

## தமிழருக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் புதிய ஆண்டிலாவது புதிய அரசமைப்பின் ஊடாகத் தீர்வு காணப்பட வேண்டும். ஆட்சியில் எந்த அரசு இருந்தாலும் இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல் தமிழர்களாகிய நாம் தீர்க்கமான முடிவுகளை இந்த ஆண்டில் எடுப்போம்.

அனைவருக்கும் எனது இனிய புதுவருட வாழ்த்துக்கள். - என்றுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# சீனாவின் ஆதிக்கமும் அத்துமீறலும்..........






வெளிநாட்டுக் கப்பல்கள் சீனாவின் முன் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். வெளிநாட்டுக் கப்பல்களின் நடமாட்டம் நாட்டின் உள்ளக மற்றும் கடல் பிரதேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக இதற்கு சீனா காரணம் கூறுகிறது.

தென்சீனக் கடலில் சீனா முழுமையான ஆதிக்கம் செலுத்தும் அந்நாட்டின் புதிய சட்டத்துக்கு தான் உடன்படப்போவதில்லை என பிலிப்பைன்ஸ் அரசு 16 செப்டம்பர் 2021இல் அறிவித்தது. இக்கடல் பரப்பில் தமக்கும் உரிமை இருக்கின்றது என்று அந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் அமெரிக்காவுடனான பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தை மீண்டும் பிலிப்பைன்ஸ் தொடரப் போவதாக தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது என அல்ஜஸீரா செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தோ – பசிபிக் கடல் பிராந்திய போக்கு வரத்து சுதந்திரத்தையும், பாதுகாப்பு, உறுதிப்பாடு, சுபீட்சம் என்பனவற்றையும் இரு நாடுகளும் உறுதி செய்யக் கடமைப் பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது. இந்தோ – பசுபிக் பிராந்தியம் என்பது இந்து சமுத்திரம், மேற்கு மற்றும் மத்திய பசுபிக் சமுத்திரம் மற்றும் தென் சீனக் கடல் என்பனவற்றை உள்ளடக்கியது ஆகும்.

**அமெரிக்க பிலிப்பைன்ஸ் ஒப்பந்தம்**

அமெரிக்காவுடன் பிலிப்பைன்ஸ் செய்துகொண்டிருந்த இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை முன்னர் பிலிப்பைன்ஸ் இரத்துச் செய்திருந்தது. எனினும் தெற்காசிய தீவுக் கூட்டப் பிராந்திய பாதுகாப்புக்கு சீனா தன் பங்களிப்பை வழங்கவில்லை என்று கருதிய பிலிப்பைன்ஸ் 2021இல் மீண்டும் அமெரிக்காவுடனான தன் பழைய ஒப்பந்தத்தை புதுப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பாக தென்சீனக் கடலில் அமெரிக்கா இந்தச் சூழலில் தென்சீனக் கடற்பரப்பில் சர்ச்சைக்குரிய இடத்தில் பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்க போர்க் கப்பல்கள் கூட்டுப் பயிற்சியை 2012இல் மேற்கொண்டிருந்தன. இதில் அமெரிக்காவின் 700க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஈடுபட்டனர். அமெரிக்காவின் பிரம்மாண்ட போர்க் கப்பல்கள் கடற்பரப்பில் நிறுத்தப்பட்டன.

தென்சீனக் கடற்பரப்பு முழுவதையுமே சீனா தமக்கு உரியதாக பிரகடனம் செய்கிறது என அமெரிக்காவும் குற்றஞ்சாட்டி இருந்நந்து.

**கடல் விவகாரம் சர்வதேச தீர்ப்பாயத்துக்கு**

அண்மையில் தென்சீனக் கடற்பரப்பில் வியட்நாமுக்குச் சொந்தமான பகுதியில் எண்ணெய் அகழாய்வு மேற்கொண்ட இந்தியாவின் நடவடிக்கைக்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் தென்சீனக் கடல் உலகின் பொதுச்சொத்து என்று இந்தியா பதில் கொடுத்திருந்தது.

சீனக் கடற்பரப்பில் பிலிப்பைன்ஸ் தமக்கு சொந்தமாக உரிமை கோரும் தீவுப் பகுதியில் அத்துமீறி நுழைந்த சீன மீன்பிடிக் கப்பல்களை பிலிப்பைன்ஸ் கடற்படை அண்மையில் விரட்டியடித்தது. மேலும் தமது போர்க் கப்பல்களையும் அப்பகுதிக்கு அனுப்பி வைத்தது.

இதற்குச் சீனா கடுமையாக எதிர்ப்பு தெரிவித்ததுடன் பிலிப்பைன்ஸின் போர்க் கப்பலை வெளியேறுமாறும் எச்சரித்திருந்தது. இதற்குப் பதிலடியாக பிரான்ஸ் நாட்டு தொல்லியல்துறையினர் ஆய்வில் ஈடுபட்டிருந்த பிலிப்பைன்ஸ் பதிவு எண் கொண்ட படகை சீன கடற்படையினர் அதிரடியாகச் சோதனையிட்டு கைப்பற்றினர்.

இந்நிலையில் சீனா மற்றும் பிலிப்பைன்ஸ் இடையே உருவான தென்சீனக் கடல் தொடர்பான மோதல் ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்ட சர்வதேச தீர்ப்பாயத்துக்கு கொண்டு செல்லப்படுகிறது.

# இளைய சகோதரன் கொலை மூத்த சகோதரன் கைது

கல்னெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் இடம்பெற்ற மோதலில் இளைய சகோதரனை மண்வெட்டியால் தாக்கி கொலை செய்த மூத்த சகோதரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் அவுக்கண பிரதேசத்தை சேர்ந்த லலித் சந்திரகுமார என்ற 46 வயதுடைய முன்னாள் கடற்படை வீரராவார்.

இவர் கடற்படை முகாமில் கடமையாற்றும் காலத்தில் இடம்பெற்ற விபத்தொன்றினால் ஊனமுற்று பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இந்நிலையில், இரு சகோதரர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், மூத்த சகோதரன் இளைய சகோதரனின் தலையில் மண்வெட்டியால் தாக்கியுள்ளார். இதில் காயமடைந்து தரையில் வீழ்ந்தவரை மூத்த சகோதரன் மீண்டும் பலமாகத் தாக்கி கொலை செய்துள்ளார்.

இது தொடர்பில் இவர்களது தாயாரிடம் பொலிஸார் விசாரிக்கையில், தனக்கு மூன்று பிள்ளைகள் இருப்பதாகவும் இரண்டாவது மகன் திருமணமாகாதவர் எனவும் சகோதரர் இருவருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் மூத்த சகோதரன்



இளைய சகோதரனை தாக்கியதாகவும் கூறியுள்ளார்.

கைதான சந்தேக நபர் சம்பவ இடத்தை விட்டு தப்பிச்செல்ல முற்பட்டபோதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்னெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தேருநர் இடாப்பு மீளாய்வு இன்று முதல் தொடங்குகிறது

அரசமைப்பின் பிரகாரம், 2024 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 16 ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க இன்று முதல் தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன எனவும் அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசமைப்பின் அடிப்படையில் ஒக்ரோபர் 16 ஆம் திகதி புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ளது.

அதற்கான பிரதான பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக தற்போது, முன் ஆயத்தச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்தவகையில், 2024 ஆம் ஆண்டுக்கானதேருநர்இடாப்புமீளாய்வு நடவடிக்கைகள் ஜனவரி முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன. இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மற்றும் ஊடகங்கள் ஊடான விளம்பரங்கள் நாளை (இன்று) முதல் வெளியிடுவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

வழக்கமாக ஆண்டு தோறும் தேருநர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்தே ஆரம்பிக்கப்படுகிறது. எனினும், இந்த ஆண்டு தேர்தல் காலமாக இருப்பதால்ஆணைக்குழுஅப்பணியை முற்கூட்டியே ஆரம்பித்துள்ளது. – என்றார்.

# வெலிகமவில் பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு; ஒருவர் சாவு

## மற்றுமொருவர் காயம்

மாத்தறை –வெலிகம பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபொலிஸார்மீதுதுப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த துப்பாக்கிப் பிரயோகம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது பொலிஸ் அதிகாரியொருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவில் கடமையாற்றும் சார்ஜன் ஒருவரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். வெலிகம பகுதியில் நடத்தப்பட்ட சுற்றி வளைப்பின் போது, குழுவொன்றால் இந்தத் துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் துப்பாக்கிப் பிரயோகமொன்றை மேற்கொண்டு வானொன்றில் தப்பிக்க முயற்சித்த தருணத்தில் பொலிஸார் பதில் துப்பாக்கி பிரயோகத்தை நடத்தியுள்ளனர்.

இதன்போது பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகம்நடத்தப்பட்டநிலையிலேயே, பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளார். (05)

# ஐக்கிய அரபு அமீரக சிறைகளில் இருந்த 44 இலங்கையர்களுக்கு பொதுமன்னிப்பு

ஐக்கிய அரபு அமீரகத்தின் 52 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அந்நாட்டு சிறைகளில் வைக்கப்பட்டிருந்த 44 இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அபுதாபியில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதேவேளை, 44 இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதன் மூலம் இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மேலும் பலப்படுத்தப்படும் என இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

விடுதலை செய்யப்பட்டவர்களை அபுதாபியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிகாரிகள் மற்றும் இலங்கையின் வெளியுறவு அமைச்சுடன் இணைந்து நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுத்துள்ளன. (05)

# மாத்தறை சிறைச்சாலையில் மர்ம நோய்த்தொற்று தாக்கம்

## மற்றுமொரு கைதியும் சாவு

மாத்தறைசிறைச்சாலையில் மர்மநோய்த்தொற்றுக்குள்ளான மற்றுமொருகைதியும்உயிரிழந்துள்ளார் எனச் சிறைச்சாலை அதிகாரி தெரிவித்தார்.

மாத்தறைசிறைச்சாலையில் இருந்த கைதிகளுக்கிடையே பரவிய மர்ம நோயால் பாதிக்கப்பட்ட பலர் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்த நோய் தாக்கம் காரணமாக ஏற்கனவே கைதியொருவர் உயிரிழந்திருந்தார். இந்த நிலையில், மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களில் சிலர், தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர். இவ்வாறு சிகிச்சை பெற்று வந்த வலஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த 53 வயதான கைதி ஒருவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை,சிறைச்சாலை கைதிகளுக்கிடையில் பரவியது மூளை காய்ச்சல் என சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# புத்தூரில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம் – புத்தூர் கிழக்கு பகுதியில் உள்ள வீடொன்றின் மீது சனிக்கிழமை பெற்றோல் குண்டுவீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீட்டிலுள்ளவர்கள் உறங்கிக்கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் வீட்டின் மீது பெற்றோல் குண்டை வீசி தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இத்தாக்குதலால் வீட்டின் முன்பகுதி சேதம் அடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)



# ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் மாலம்பேயில் சடலங்களாக மீட்பு

மாலம்பே – கஹன்தொட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் தாய் (வயது 35), மகன் (வயது 10), மகள் (வயது 09) ஆகியோர் சடலங்களாகமீட்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தற்கொலை செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் குடும்பத்தலைவரானதந்தையும் தற்கொலை செய்துகொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# யாழ். மறைமாவட்ட ஆயரின் புதுவருட வாழ்த்து செய்தி



2024 ஆவது புதிய ஆண்டு மலருகின்ற வேளை உலகம் முழுவதிலும் இப்புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இப்புதிய ஆண்டு உங்கள் உள்ளத்து எண்ணங்கள் ஏக்கங்கள் எதிர் பார்ப்புக்கள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர் மிக்க ஆண்டாக அமைய முதலில் வாழ்த்துகிறோம்.

2023 ஆவது ஆண்டு பல இன்பமான அனுபவங்களையும் பல துன்பமான அனுபவங்களையும் தந்து எம்மை விட்டுக் கடந்து சென்று விட்டது. கடந்த ஆண்டின் அந்த இன்ப அனுபவங்களுக்கு மட்டுமல்ல துன்ப அனுபவங்களுக்கும் இறைவனுக்கு நன்றி சொல்லுவோம்.

மலரும் புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும் இனியதாய் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எம் எல்லோர் மனதுகளிலும் நிறையவே உண்டு.

மலரும் புதிய 2024 ஆம் ஆண்டை இறைவேண்டுதல் ஆண்டாக உலகம் முழுவதிலும் கடைப்பிடித்து இறைவேண்டுதலில் முழுமையாக ஈடுபடும்படி திருத்தந்தை பிரான்ஸீஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

செபம் என்பது ஒரு பலமான ஆயுதமாகும். செபம் என்ற ஆயுதத்தால் அனைத்தையும் அடைய முடியும். அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியும். உலகில் முடியாதது எனக்கருதப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் முடிவு காண முடியும்.

கடந்த ஆண்டின் பல கடின அனுபவங்களின் தாக்கம் இன்னும் எம்மை விட்டு முழுமையாக அகலவில்லை. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கப் போகிறது என்ற பயம் முடிவில்லாத பயமாகவே உள்ளது. இறை வேண்டுதல் வழியேதான் இதுபோன்ற எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும்.

இறை வேண்டுதல் ஆண்டான 2024 ஆம் ஆண்டு முழுவதும் செபத்தில் நம்பிக்கை வைத்து இறைவேண்டுதலில் ஈடுபடும்படி அனைவருக்கும் அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

இறைவனின் அன்னையும் இறைமக்களின் அன்னையுமான தேவ அன்னை தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் பாதுகாத்து வழி நடத்த வேண்டி இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம். (05)

# சம உரிமையை வழங்கட்டும் பிறக்கின்ற 2024 புத்தாண்டு

## இ.தொ.கா. தவிசாளர் வாழ்த்து

பிறக்கும் புத்தாண்டு இலங்கை மக்களுக்கு சம உரிமையையும் சம அந்தஸ்தையும் வழங்கி நாட்டு மக்கள் அனைவருக்கும் சிறந்த வாழ்க்கை சூழலை ஏற்படுத்தும் ஆண்டாக அமைய வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் விடுத்துள்ள புதுவருட வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

புதுவருட பிறப்பை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


பஞ்சம், பசி, பட்டினி என்பவற்றிற்கு விடிவு தேடி புதிய வாழ்வின் ஏக்கங்களை கண்களில் சுமந்து இலங்கை வந்து குடியேறிய இந்திய வம்சாவழி தமிழ் மக்கள் உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு வாழ்வின் இருள் நீக்கி ஒளி பெற்ற ஒரு பெரும் சமுதாயமாக, வரலாற்று மாற்றத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்நாட்டின் சகல முன்னேற்றத்திற்கும் இந்திய வம்சாவளி மக்கள் தமது பங்களிப்பினை பெருமளவிலே செலுத்தியிருக்கின்றார்கள். உழைக்கும் வர்க்கமாகிய தோட்ட தொழிலாளர்கள் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக இருந்து வருகின்றார்கள். எந்தவொரு காலகட்டத்திலும் இந்நாட்டுக்கு உழைப்பாளிகளாக இருந்திருக்கின்றார்களே தவிர இந்த நாட்டுக்கு எந்த விதமான பாதகத்தையும் ஏற்படுத்தியதில்லை.

இவர்கள் இதுவரையிலும் அனைத்து உரிமைகளையும் பேரம் பேசும் சக்திகளினால்தான் பெற்றிருக்கின்றார்கள்;. எனவே இந்த புதிய வருடத்தில் சகல உரிமைகளுடன் வாழ்வதற்கும் அதேபோல மக்கள் வாழ்க்கையில் இவர்களின் நியாயமான கோரிக்கைகளை அனைவரும் நிறைவேற்றுவதற்கு ஒன்றிணைந்து உழைப்போம். நமது பலம், ஒற்றுமை என்பவற்றை நிலைநிறுத்தி நாம் தலைநிமிர்ந்து ஏனையோருக்கு நிகராக வீறுநடைபோடவும் பிறக்கும் புத்தாண்டில் உறுதி கொள்வோம் என்றும் அந்த வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தர்மத்தின் அடிப்படையில் மக்களை நேசிக்கும் ஆட்சியாளர்களை நாம் உருவாக்க வேண்டும்

## புதுவருடச் செய்தியில் கலாநிதி ஆறு.திருமுருகன் வலியுறுத்து



எவர் ஆட்சியில் இருந்தாலும் தர்மத்தின் அடிப்படையில் மக்களை நேசிக்கவேண்டும். உண்மையான சத்திய ஆட்சி உருவாக வேண்டும். எல்லா மக்களுக்கும் பூரண சுதந்திரம் கிட்ட வேண்டும்.

-இவ்வாறு தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உப தலைவரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன்.

அவர் தனது செய்தியில் மேலும் தெரிவித்தவை வருமாறு -

அன்பர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான புத்தாண்டு வாழ்த்துக்கள்.

காலம் வேகமாகக் கடக்கிறது. மனிதர்களாகிய நாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு இறைவன் பல வழிகளைத் தந்துள்ளான். மனித வாழ்வில் நாம் சாதிக்கக் கூடியவை ஏராளம். நல்ல விடயங்களை சாதித்த மனிதர்கள் நமக்கு உதாரணமாக விளங்குகிறார்கள்.

எனவே நாம் முயற்சியுடையவர்களாகத் திகழ வேண்டும். 2023 விடைபெற்றுவிட்டது 2024 இன்று பிறந்து விட்டது. புதிய ஆண்டில் நல்ல விடயங்களைச் செய்வதற்கு நாம் திட்டமிடுவோம். எமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாம் இயன்ற முயற்சியை மேற்கொள்வோம். காலம் பெறுமதியானது. காலத்தை வீணாக்காதீர்கள் சென்ற நாள் திரும்பி வராது. பழையவற்றை எண்ணிக் கலங்காது புதியவற்றை சாதிப்பதற்கு ஆயத்தமாவோம்.

எம் மண்ணில் நல்லவையே நடக்க வேண்டுமென்று பிரார்த்திப்போம். அறம் செய்யாத ஆட்சி நிலைப்பதில்லை. எவர் ஆட்சியில் இருந்தாலும் தர்மத்தின் அடிப்படையில் மக்களை நேசிக்கவேண்டும். உண்மையான சத்திய ஆட்சி உருவாக வேண்டும். எல்லா மக்களுக்கும் பூரண சுதந்திரம் கிட்ட வேண்டும். தேவையற்ற ஆடம்பரங்களை எம்மக்கள் தவிர்க்க வேண்டும். இளைய தலைமுறையை நல்வழிப்படுத்துவதற்கு அவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்வோர் முன் உதாரணமாக செயற்பட வேண்டும். எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கு இனிய வழியில் வாழ முற்படுவோம். புதிய ஆண்டு புது மனிதர்களாக எம் பணி தொடர்வோம். -என்றுள்ளது. (05)

# பெரமுனவை மீறி ரணில் செயற்பட முடியாது

## நாமல் திட்டவட்டம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியே தற்போதும் ஆட்சியில் இருக்கின்றது. எமது பொதுஜன பெரமுனவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்தது. எனவே, எமது கட்சியை ஒதுக்கிவிட்டு அல்லது எமது கட்சியின் தீர்மானத்தை மீறி ஜனாதிபதி செயற்பட முடியாது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி தான் நினைத்த மாதிரி செயற் பட்டால் அதன் விளைவுகள் பாரதூரமாக அமையும். எமது கட்சியின் ஆதரவை அவர் இழக்க நேரிடும். இந்த அரசை அவர் முன்கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்படும். ஒட்டு மொத்தத்தில் அவர் பழைய ரணில் விக்கிரமசிங்க ஆவார். இதை அவருக்கு நாம் புரியவைக்கத் தேவையில்லை. அவரே புரிந்துகொண்டு செயற்படுவார் என்று நம்புகின்றோம்.

என்னதான் இருந்தாலும் புதிய ஆண்டில் இரண்டு பிரதான தேர்தல்களை ஜனாதிபதி நடத்தியே ஆகவேண்டும். தேசிய தேர்தல்களைப் பிற்போட எமது கட்சி இடமளிக்கமாட்டாது.

நடைபெறவுள்ள இரண்டு பிரதான தேர்தல்களிலும் எமது பொதுஜன பெரமுன கட்சியே வெற்றிவாகை சூடும். ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் வேட்பாளர் யார் என்ற தீர்மானத்தை நாம் இன்னமும் எடுக்கவில்லை. - என்றார்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் மாற்றத்தை கண்டு அஞ்சுகிறார் ஜனாதிபதி ரணில்

## சஜித் பெருமிதம்



ஐக்கிய மக்கள் சக்தி பரந்த கூட்டணியாக மாற்றமடைவதைக் கண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அச்சமடைமந்துள்ளார். அதன் காரணமாகவே ஊடக வலையமைப்புக்கள் ஊடாக எமக்கெதிரான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறு எந்த முயற்சிகளை முன்னெடுத்தாலும் எமது உயர்வைத் தடுக்க முடியாது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மாத்தறையில் இடம்பெற்ற ஜவய உள்ளூராட்சிமன்றப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

ஐக்கிய மக்கள் சக்தி பரந்த கூட்டணியாக மாறுவதற்கு அஞ்சி, உறவினர்கள் மற்றும் நண்பர்களின் ஊடக வலையமைப்புக்களைப் பயன்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றார். இவ்வாறு எந்த முயற்சிகளை முன்னெடுத்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி பரந்த கூட்டணியமைப்பதை எவராலும் தடுக்க முடியாது.

நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையில், மக்களின் வாழ்வாதாரம் சீர்குலைந்துள்ளது. இவ்வாறான நிலையிலும் கூட மக்களுக்கு வழங்கப்படும் இலவச மருந்துகளில் மோசடிகள் இடம்பெறுகின்றன. முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையைத் தோற்கடித்த அனைவரும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

நாட்டில் நீதி, நியாயம் மற்றும் உண்மையின் வெற்றிக்காக ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்நிற்கும். துப்பாக்கி ஏந்திய நரியின் முன் மண்டியிடும் நபர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை. வருமானத்தை ஈட்டுவதற்கு சரியான தொலைநோக்குப் பார்வையும் வேலைத்திட்டமும் இருக்க வேண்டும்.

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு இந்த வேலைத்திட்டத்தை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பதை ஐக்கிய மக்கள் சக்தி நிரூபித்துள்ளது. நாட்டை வங்குரோத்தாக்கியவர்கள் யார் என்பதை நாம் நீதிமன்றத்தில் வெளிப்படுத்தியுள்ளோம். எனவே அதற்குக் காரணமானவர்கள் மீது பாதிக்கப்பட்ட மக்கள் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்து, இழப்பீட்டை பெற்றுக்கொள்ளலாம். -என்றார். (05)


யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்ச்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILE zone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.01.2024இல் வெளியிடப்பெற்றது.